FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **262/2023**
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், சாத்தூர் நகர காவல் நிலையம். (குற்ற எண்.218/2023) |
| Accused | திரு.சோமசுந்தரம் என்ற சோமு, த/பெ.திரு.சன்னாசித்தேவர் என்ற சன்னாசி |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) இ.த.ச<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) இ.த.ச |
| Finding | இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) இன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| Sentence | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| | சோமசுந்தரம் என்ற சோமு | சன்னாசித்தேவர் என்ற சன்னாசி | இந்து | தொழிலதிபர் | சாத்தூர். | 60 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 09.06.2023 | 13.06.2023 | 26.06.2023 | 26.06.2023 | 02.11.2023 | 13.03.2026 | 18.03.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 27.06.2023
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :– 08.09.2023
இதன் நகல் :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:34:49 +0530

Judicial Magistrate, No.II,
Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 18 ஆம் நாள், புதன்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 262/2023
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், சாத்தூர் நகர காவல் நிலையம். (குற்ற எண்.218/2023) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.சோமசுந்தரம் என்ற சோமு (வயது 60), த/பெ.சன்னாசித்தேவரி என்ற சன்னாசி, தென்வடல் புதுத் தெரு, சாத்தூர். |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 09.06.2023 |
| 8. | புகார் தேதி (Complaint) | 13.06.2023 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 26.06.2023 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 26.06.2023 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 02.11.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 13.03.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) இ.த.ச இன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 13.03.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.முத்துக்கண்ணு, B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும்,



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:35:02 +0530

இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>குற்றச்சாட்டு</u> :–**

**1.1.** 09.06.2023 ம் தேதி 15.10 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் சாத்தூர் படந்தால் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சாத்தூர் மெயின் சாலையில் தெற்கிலிருந்து வடக்காக சாத்தூர் பழைய அரசு மருத்துவமனை முன்பு சென்றுள்ளார். அப்போது எதிரி சோமசுந்தரம் என்ற சோமு என்பவர் புகார்தாரரை வழிமறித்து தடுத்து, "தேவிடியா மகளே பால்பாண்டி மறவர் சமுதாய செயலாளர் என்றால் பெரிய மயிரா" நானும் தேவர் தாண்டா உங்களுக்கு கமிஷன் பணம் கொடுக்க முடியாது "தேவிடியா கூதி மகனே" என்று அசிங்கமாக திட்டியுள்ளார். பின்னர் நிகழ்நிலை புகார்தாரரை கீழே கிடந்த கல்லை எடுத்து பார்த்து கொலை மிரட்டல் செய்து, இடுப்பில் வைத்திருந்த சாவிக்கொத்தில் இருந்த கத்தியால் நிகழ்நிலை புகார்தாரரின் இடது முன்னங்கையில் குத்தி சாதாரண காயத்தை ஏற்படுத்தியுள்ளார். பின்னர் கீழே தள்ளிவிட்டு தலையின் பின்புறம் வீக்க காயத்துடன் கூடிய சாதாரண காயத்தைஏற்படுத்திய குற்றத்திற்காகஎதிரி மீது பிரிவுகள்294(b), 324, 341, 506(2) இ.த.ச இன்கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–**

**3.1.** எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்.

**3.2.** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 341, 324, 506(2) கீழான குற்றங்களுக்கு குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, அதை அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:35:06 +0530

**4. அரசு தரப்பு சாட்சிகள் :–**

பட்டியல் சாட்சிகளில் இருந்து ஒரு நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரைட் ஐசக் சுவாமிநாதன் என்பவரும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :–**

**5.1.** அ.சா.1 – கருப்பசாமி பாண்டியன் என்பவர் சாத்தூரில் வசித்து வருகிறார். இவர் நிலம் மற்றும் வீடு விற்பனை செய்யும் தரகராக இருந்து வருகிறார். முருகேசன் என்பவரது வீட்டை விற்பனை செய்வது தொடர்பாக, அந்த வீட்டின் ஆவணங்களை வாங்கிய அ.சா.1 – கருப்பசாமி பாண்டியன், அவற்றை இந்த வழக்கின் எதிரியான சோமசுந்தரத்திடம் கொடுத்துள்ளார். இதற்குத் தரகு தொகையாக ரூபாய் ஒரு லட்சம் தருவதாகக் கூறிய சோமசுந்தரம், அந்த வீட்டைத் தன்னுடைய உறவினர் பெயருக்குக் கிரையம் செய்து கொண்டார். ஆனால், பேசியபடி பணத்தைக் கொடுக்கவில்லை.

**5.2.** பலமுறை கேட்டும் எதிரி சோமசுந்தரம் காலம் தாழ்த்தி வந்த நிலையில், கடந்த 09.06.2023 அன்று மாலை சுமார் 3:10 மணியளவில், அ.சா.1 – கருப்பசாமி பாண்டியன் தனது சொந்த வேலையாகப் படந்தால் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சாத்தூர் பிரதான சாலையில் பழைய அரசு மருத்துவமனை முன்பு அவர் சென்றபோது, அங்கு நின்றிருந்த எதிரி சோமசுந்தரம், அ.சா.1 – கருப்பசாமி பாண்டியனைப் பார்த்து ஆபாசமாகப் பேசி திட்டி, "இனிமேல் தரகு பணம் கேட்டு வந்தால் அடித்தே கொன்று விடுவேன்" என்று கூறி அருகில் இருந்த பெரிய கல்லைக் காட்டி மிரட்டினார்.

**5.3.** மேலும், எதிரி சோமசுந்தரம் தனது இடுப்பில் வைத்திருந்த சாவிக்கொத்தில் இருந்த மடக்கு கத்தியை எடுத்து, அ.சா.1 – கருப்பசாமி பாண்டியனின் இடது முன்கையில் குத்தினார். இதனால் அவருக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. தொடர்ந்து எதிரி சோமசுந்தரம், அ.சா.1 – கருப்பசாமி பாண்டியனைக் கீழே தள்ளி விட்டதில், தலையின் பின்பக்கத்தில் வீக்கமும் காயமும் ஏற்பட்டது. அப்போது பால்பாண்டியையும், அ.சா.1 – கருப்பசாமி பாண்டியனையும் கொன்று விடுவேன் என்று எதிரி மிரட்டல் விடுத்தார். இச்சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற அ.சா.1 – கருப்பசாமி பாண்டியன், 13.06.2023 அன்று இரவு 8 மணிக்கு சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆபிரகாமிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார்.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:35:12 +0530

**5.4.** அதன் அடிப்படையில், குற்ற எண் 218/2023–ன் கீழ் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 341, 294(b), 324, 506(2) ஆகிய குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு (அ.சா.ஆ.2) செய்யப்பட்டது. இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் முருகேசன், சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயாரித்தார். அவர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தார். அ.சா.1 – கருப்பசாமி பாண்டியனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அர்ச்சனாவை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றுகளைப் (அ.சா.ஆ.7) பெற்று, மருத்துவரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். புலன் விசாரணையில் வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால், எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார். மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) இன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–**

**8.1.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரும், புகார்தாரருமான கருப்பசாமி பாண்டியன் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தில், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சாத்தூர் அரசு மருத்துவமனை முன்பு மதியம் சுமார் 3 மணி அளவில், அவருக்கும் எதிரிக்கும் இடையே பேச்சுவார்த்தையின் போது கைகலப்பு ஏற்பட்டது என்றும், தற்போது இருவரும் சமாதானமாகி விட்டதாகவும் கூறியுள்ளார். இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.3 – புகாரில் உள்ளது தன்னுடைய கையொப்பம் (அ.சா.ஆ.1) தான் என்று ஒப்புக்கொண்ட போதிலும், அதில் உள்ள விபரங்கள் பற்றி தனக்குத் தெரியாது என்று மறுத்துள்ளார்.

**8.2.** அ.சா.1 அளித்த சாட்சியமானது அவர் கொடுத்த அ.சா.ஆ.3 – புகாருக்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக இருந்ததால்,



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:35:20 +0530

அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகி குறுக்கு விசாரணை செய்த போதிலும், அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்விதமான சாட்சியமும் பெறப்படவில்லை.

**8.3.** மேலும், அ.சா.ஆ.3 – புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிப்படுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா என்பதும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது. ஓர் ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1–ன் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.3 – புகார் அவரால்தான் கொடுக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.

**8.4.** தவிர, அ.சா.1 தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதாகவும், அவ்வாறு சமாதானமாக செல்ல எதிரி அவரை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். இதனால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு, கூடுதல் சாட்சியாக உதவி ஆய்வாளர் பிரைட் ஐசக் சுவாமிநாதன் என்பவர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இச்சூழ்நிலையில், புலன்விசாரணைக் கோப்புகளைப் பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்யப் போதுமானதல்ல.

**8.5.** மேலே பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கினை நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இந்த வழக்கில் எதிரிக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9.** **<u>முடிவு</u> :–**

**9.1.** எதிரி மீது வனைந்துள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 341, 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.

**9.2.** இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**9.3.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 18.03.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:35:25 +0530

S
VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.18
18:35:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

சாத்தூர்

## பிற்சேர்க்கை

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கருப்பசாமி பாண்டியன் |
| அ.சா.2 | திரு. பிரைட் ஐசக் சுவாமிநாதன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.06.2023 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 23.02.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 13.06.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 13.06.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 13.06.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 13.06.2023 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.7 | 11.06.2023 | அ.சா.1 க்கு விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :–இல்லை.

**4. எதிரி தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை

S
VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.18
18:35:40 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,

சாத்தூர்

**குறிப்பு :–**

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.